13.02.2026

O.S.No. 29/2024

PW1– அருணாசல ரெட்டியார் – த/பெ. அழகு ரெட்டியார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் பிராது தபசில் கிராமத்தில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது வீடும், பிரதிவாதியின் வீடும் 5 வீடு தள்ளி உள்ளது. பிரதவாதிகளின் வீட்டிற்கு தென்புறத்தில் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெருவானது கிழக்கு நோக்கி தொடர்ந்து செல்கிறது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டை ஒட்டி அடுத்த மேல்புறம் 1ம்பிரதிவாதியின் சகோதரர் சுப்பையாவின் வீடு உள்ளது என்றால் சரிதான்.

2. பிரதிவாதியின் வீட்டிற்கு வடபுறத்தில் தெருவோ, பாதையோ கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு கீழ்புறத்தில் தென்வடல் தெரு கிடையாது என்றால் சரியல்ல, தெரு உள்ளது. தென்வடல் தெருவானது கிழமேல் ரோட்டிலிருந்து தென்வடல் பாதையாக மருக்கலான்குளம் சாலைக்கு செல்கிறது. கிழமேல் ரோடு எங்கு உள்ளது என்றால் நடுத்தெருவில் உள்ளது. யார் வீட்டின் வடக்கே இருந்து ஆரம்பிக்கிறது என்றால் செல்லையா ஆசாரி வீட்டில்இருந்து ஆரம்பித்து, கிழக்கே ராமர் வேளாளர் வீடுவரை செல்கிறது. நான் சொல்லும் மருக்கலான்குளம் ரோடு தெரு ஆரம்பித்து சுமார் 100அடி துாரத்தில் உள்ளது.

3. பிரதிவாதியின் வீட்டிற்கு கீழ்பக்கம் பெருமாள் ரெட்டியார் வீடு உள்ளது என்றால் சரிதான். பெருமாள் ரெட்டியார் வீடானது கிழமேல் ரோட்டின் வடபுறத்தில் பிரதிவாதி வீட்டை ஒட்டி கீழ்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். செல்லையா ஆசாரி வீட்டிற்கு மேல்புறம் தொழுவும், அதன் கீழ்புறம் அவரது வீடும் உள்ளது என்றால் சரிதான். செல்லையா ஆசாரி வீட்டை ஒட்டி மேல்புறத்தில் தென்வடல்தெரு செல்கிறது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பத்திரத்திலும் மேற்படி தெருவை பற்றி குறிப்புள்ளது.

4. பிரதிவாதிகள் வீட்டை ஒட்டி தென்புறத்தில் கிழமேல் தெருவிற்கு தென்புறம் பிரதிவாதிகளின் தொழு உள்ளது என்றால் இல்லை.கிழமேல் தெருவிற்கு தென்புறம் என்னுடைய காலிமனைக்கு மேல்புறம் பிரதிவாதிகளின் தொழு என்னுடைய 4 செண்டுக்கு மேல்புறம் 2 செண்டில் காலிமனைக்கு மேல்புறம் அவர் தொழு அமைத்துள்ளார்.

5. நான் சொல்லும் எனது காலிமனையானது 296/2பி ஆகும். பிரதிவாதியின் தொழுவானது 296/2டி3ல் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி தொழுவுக்கு கதவு எண் மற்றும் தீர்வை செலுத்திவருகிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதி வீட்டிற்கு வடபுறம் சுப்பையா ரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட இடத்தை2ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் இந்த வழக்கிற்கு தொடர்பற்றது என சாட்சி கூறிவிட்டார்.

6. சுப்பையா ரெட்டியார் பிரதிவாதிகளுக்கு சித்தப்பா முறை ஆவார். அது அவருடைய இடம் என்று எனக்கு தெரியாது. சுப்பையா ரெட்டியார் இடத்திற்கு வடபுறம் தெரு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தொழுவிற்கு தென்புறம் காந்தி ரெட்டியார் வீடு உள்ளது என்றால் சரிதான். எதற்காக நான் பிராதில் 2 தபசில் காட்டியுள்ளேன் என்றால் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 4 செண்டில் எனக்கு 2 செண்டை கொடுத்துவிட்டதால் 4 செண்டை 1ம் தபசில் என்றும், பின்பு 4 செண்டில் 2 செண்டை பிரித்து 2ம் தபசில் என காட்டியுள்ளேன். மேற்படி விவரங்கள் அனைத்தும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளதா என்றால் எனது பத்திரத்தில் 2 செண்டை பொறுத்து மட்டும் தான் உள்ளது. நான் 2 செண்டிற்கு தான் விளம்புகைகோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் விளம்புகை கோருவது 2ம் தபசில் சொத்தை பொறுத்துதான் என்றால் சரிதான்.

7. நான் எனது வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பிராது 2ம் தபசில் சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். நான் பிராது 2ம் தபசில் சொத்தில் உரிமை கோருவதற்கு வா.சா.ஆ.1 தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நத்தம் நிலம் என்பதால் பட்டா கிடையாது, வீடு கட்டினால் மட்டுமே பட்டா வழங்குவார்கள்.

8. பிரதிவாதிகளின் வீடு புல எண்.296/2பி2–ல் உள்ளதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதற்கு 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.1201 என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதி வீடு

கட்டி சுமார் 60 ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. ஆரம்பத்திலிருந்தே பிரதிவாதிகள் அந்த வீட்டில்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

9. பிரதிவாதி தொழுவிற்கு தென்புறத்தில் காந்தி ரெட்டியார் வீடு அதற்கு அடுத்த கீழ்புறம் கந்தசாமி வீடு உள்ளது என்றால் சரியல்ல, தெருவிற்கு கீழ்புறத்தில் கந்தசாமி வீடு உள்ளது. கந்தசாமி வீட்டிற்கு தெற்கே மறுக்கலான்குளம் சாலையை அணுகிறார்களா என்றால் சரிதான். நான் சொல்லும் தென்வடல் பாதையானது எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

10. 1ம் பிரதிவாதியின் மனைவி சரஸ்வதியை, நான் சொத்து சம்பந்தமாக அடித்து துன்புறுத்தியதால், என்மீது ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் அதில் என்னை விடுதலை செய்துவிட்டார்கள், அது பொய் வழக்கு. மேற்படி வழக்கானது பிரதிவாதிகளுக்கும், செல்லையா ஆசாரிக்கு தொடர்புடையது. மேற்படி வழக்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததா என்றால் என்றால் சரிதான்.

11. 1ம் பிரதிவாதி குடிக்காரரர் என்பதாலும், அவரை ஏமாற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. கிரையத்தொகை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி குடிக்காரரர் கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திய 4 நாளிலே அதை ரத்து செய்து அதை என்னிடம் தெரிவித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, கிரையத்தொகை பெற்றுவிட்டு கிரையம் ஏற்பட்டது.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்துக்குதான் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணம் ஏற்படும் சமயத்தில் 1ம் பிரதிவாதி எங்கு குடியிருந்தார் என்றால் ரோட்டிற்கு வடக்கே உள்ள வீட்டில் குடியிருந்துவந்தார். 1ம் பிரதிவாதி மேற்படி வீட்டை 2ம் பிரதிவாதிக்கு நன்கொடை கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதைபோல் தெருவிற்கு தெற்கே உள்ள இடத்தையும் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு நன்கொடை கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

13. எனக்கு எனது சொத்து 2 செண்ட் மட்டும்தான் தெரியும், கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியாது. 1ம் பிரதிவாதியை ஏமாற்றி அவர் வீடு இருக்கும் இடத்தில் மோசடியாக வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. தற்போது அதற்கு வடபுறமுள்ள சொத்தை பொறுத்து உரிமை கோரி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கிரைய ரத்துபத்திர விவரங்கள் 1993 ல் தெரியும் என்றாலும், தற்போதுதான் தெரிந்ததுபோல் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, எனக்கு 2023 ம் ஆண்டுதான் தெரியும். பிரதிவாதிகளின் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் என்ன புல எண் உள்ளது என்றால் புல எண். 296/2 பி குறிப்பிடப்பட்டுள்ளது. என் வழக்கு மோசடியான வழக்கு என்பதால் என்னுடைய வழகக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி